★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5[illegible]

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

'ராமன் வடநாட்டான்'

அவனைப் பூஜிக்கவேண்டாமென்போர் அரக்கர்கள்

ஆச்சாரியாரின் ஒப்புதலும் பிதற்றலும்

"வடகாட்டு மக்களுக்கு ராமன் மீதுள்ள பக்தி, தென்னாட்டு மக்களுக்கு இல்லை. இதற்குப் பல காரணங்களிருக்கலாம். ஒரு காரணம், ராமன் வடநாட்டிலிருந்து வந்தான் என்பதுதான்.

"அன்று விசுவாமித்திரர் செய்ய விரும்பிய யாகத்தை [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: சித்திரை 7உ வியாழன் (19—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 8உ வெள்ளி (20—4—56) [இதழ் 263

டில்லி ஓரவஞ்சனைக்கு மீண்டும் இடி!

'திரு-கொச்சி வேண்டுமென்றே அலட்சியப்படுத்தப்படுகிறது'

'இயற்கைச் செல்வங்களை பெருக்க ஏற்பாடு இல்லை'

'அடிப்படைத் தொழில்களை நிறுவ எந்த முயற்சியும் இல்லை'

'வரிவிதிப்புதான்கூடுகிறது! வாழ்வில் வளம்கூடவில்லை'

மக்கள் சபையில் திரு-கொச்சி உறுப்பினர் இருவர் முழக்கம்

"திரு—கொச்சியின் தொழில் வளர்ச்சியில், இந்தியப் பேரரசு இரக்கமற்று வஞ்சனையாக நடந்துகொள்ளுகிறது. தனது ஏற்றுமதி மூலம் ஏராளமான டாலரை சம்பாதித்துக் கொடுத்துவருவதையும் பொருட்படுத்தாது இரண்டாவது அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கும் வகையில், திரு—கொச்சி வேண்டுமென்றே அலட்சியப்படுத்தப் பட்டு இருக்கிறது.

"இயற்கை வசதிகளைப் பெருக்க அங்கு மிகுந்த வாய்ப்புகள் இருந்துவருகின்றன. அங்கு அடிப்படைத் தொழில்களை நிர்மாணிப்பதற்கான இயற்கை சாதனங்கள் உள்ளன. இருந்தாலும், அதற்கான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை."

—இவ்வாறு, மக்கள் சபையில் திடி மசோதா மீது பேசிய திரு—கொச்சி பொதுவுடமை உறுப்பினர் பி. பி. நாயர் ஆவேசமாக எடுத்துக்காட்டி, ஆனித்தரமாகக் கண்டித்தார்.

"என்னுடைய ராஜ்யத்தின் தொழில் பிரச்சினைகளில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் குறைந்தபட்ச கவனமே செலுத்தப் பட்டிருக்கிறது.

"ஒவ்வொரு ஆண்டும் வரிச்சுமை வளர்ந்துகொண்டே போகிறது. இது வெற்றி தரும் நிதிக்கொள்கையாக இருக்க முடியாது."

இக்கருத்தை, திரு—கொச்சி சார்பில் சுயேச்சை உறுப்பினராக இருக்கும் திருவாட்டி அன்னி மாஸ்கரைன் மக்கள் சபையில் எடுத்து விளக்கினர்.

'பாரபட்சம் காட்டுகிறது! மாற்றாந்தாய்போல் நடக்கிறது'

'வடநாட்டின் வளத்திற்குக் கோடிக்கணக்கில் செலவிடுகிறது'

'பொதுவாக தெற்கும் குறிப்பாகத் தமிழ்நாடும் ஒதுக்கப்படுகிறது'

இந்தியப்பேரரசு போக்கு: மக்கள் சபையில் விமர்சனம்

புதுடெல்லி, ஏப். 18—

"தொழில் துறையில், பொதுவாக தெற்கையும் குறிப்பாக தமிழ் நாட்டையும், பாரபட்சமாகவும் மாற்றாந்தாய் மனப்போக்கிலும், இந்தியப் பேரரசு நடத்திவருகிறது.

"அதே நேரத்தில் கோடிக்கணக்கில் ரூபாயை வட நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக மட்டுமே, இந்தியப் பேரரசு செலவிட்டு வருகிறது.

"பிற்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்தில் போதிய கவனை எடுக்கத் தவறிவிட்டது."

நிதி மசோதாமீது பேசிய தமிழ்நாட்டு உறுப்பினர் பூவராகசாமி அவர்கள் மேற்படி கருத்தை உள்ளக் கொதிப்புடன் மக்கள் சபையில் உரைத்தார்.

டால்மியாமீது மோசடி வழக்கு

புலன் விசாரணை முடிய இரு மாதங்களாகுமாம்

பாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி கிர்வாகி என்ற என்ற முறையில், ரூ. 2 கோடி பெறுமான சர்க்கார் கடன் பத்திரங்களை, மோசடி செய்ததாக, ராமகிஷ்ண டால்மியா மீது தொடரப்பட்டுள்ள வழக்கை ஒட்டி, அவர் புரிந்துள்ள குற்றங்கள் குறித்து விசாரணை செய்ய இன்னும் இரண்டு மாதங்கள் தேவைப்படும் என்று குற்ற இலாகா போலீசார் தெரிவித்திருப்பதாக மந்திரி எம். சி. ஷா மக்கள் சபையில் தகவல் தந்திருக்கிறார்.

புலன் விசாரணையில் காலதாமதம் ஏதும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

திருச்சி மாநாட்டுக்குத் தனி இரயில்கள் விட ஏற்பாடு

திருச்சியில் மே 17, 18, 19, 20 தேதிகளில் நடைபெறவிருக்கின்ற தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டுக்கு தென் பகுதி இரயில்வே பல பகுதிகளிலிருந்தும், தனி இரயில்கள் விடவும், அதிகம் பெட்டிகள் சேர்க்கவும் தக்க ஏற்பாடு செய்துத் தருவதாக இரயில்வே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள்.

மாநிலங்களை உருமாற்றும் மசோதா

மக்கள் சபையில் தகராறுக்கிடையே தாக்கலாயிற்று

புதுடில்லி, ஏப். 18—

இந்தியத் துணைக்கண்டத்து மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்கான மாநிலப் புது அமைப்பு மசோதா இன்று மக்கள் சபையில் தாக்கல் செய்யப்பட்டது.

உள் நாட்டு மந்திரி இதனைத் தாக்கல் செய்தபோதே, மசோதாவை எதிர்த்துக் கேரள ம. சோ. கட்சி உறுப்பினரான சே. கேளப்பன் ஆட்சேபணை கிளப்பினர்.

கேரள சட்டசபை, மசோதா குறித்து கருத்தறிவிக்கவில்லை என்று அவர் கூறினர்.

உள்நாட்டு மந்திரி, பற்'குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டுள்ள திரு-கொச்சி மாநிலத்தின் சட்டசபையை இந்த விவகாரத்தில் கலந்தாலோசிக்கத் தேவை இல்லை. உண்மையில், இந்த புது அமைப்புக்குறித்து அந்த மாநில சட்டசபையை ஏற்கனவே கருத்தறிவிக்கும்படி கேட்டிருந்தோம். ஆனால் அது கருத்தறிவிக்குமுன், சட்டசபையே கலைக்கப்பட்டு விட்டது! என்று வாதாடினாராம்.

அதன்பின் கேளப்பனின் ஆட்சேபணை பொருட்படுத்தப்படாமல், அந்த மசோதாவும் அதை ஒட்டிய, அரியல் சட்டத் திருத்த மசோதாவும், சபையில் தாக்கலாயின.

இவை குறித்து விவாதிக்க மூன்று நாள் அவகாசம் போதுமானதல்ல என்று எதிர்க்கட்சியினர் வாதாடியும் பலனில்லாது போய்விட்டது.

★

சிறுபான்மையினர், சமூக, பொருளாதாரத் திட்டங்கள், முதலிய குறிப்பான விவகாரங்களிலும் சபை ஆலோசனை கூறும் என்று தெரியவருகிறது.

மண்டலக் குழுக்கள்

செலவுகளை டெல்லி ஏற்குமாம்

புதுடில்லி, ஏப். 18—

மாநிலங்களைத் திருத்தி அமைக்கும்போது, அதன் ஒரு பகுதியாக அமைகிற 'மண்டலக் குழு'க்களின் செலவுகளை, டெல்லி சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் என்று தெரியவருகிறது.

அமையப்போகிற ஐந்து மண்டலக் குழுக்களுக்குமாக, ஆண்டொன்றுக்கு சுமார் 5 இலட்ச ரூபாய் செலவாகுமென மாநிலப் புது அமைப்பு மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

மண்டலக் குழுவின் நிர்வாகச் செலவு முழுவதையும் டெல்லியே ஏற்குமாம்.

குழுக்களின் பணி எல்லாம், வெறும் ஆலோசனை கூறுவதே என்றும், மாநில எல்லைகளுக்காக ஏற்படும் தகராறு, மொழி வழிச்

மக்கள் சபையில் வெளிநடப்பு

மக்கள் சபையின் சென்ற கூட்டத்தில் தாக்கலாகியிருந்த அரியல் சட்ட ஆறாவது திருத்த மசோதாவை, சர்க்கார், இந்த கூட்டத்தில் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிப்பதற்காக, சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் தனது விசேட அதிகாரங்களை உபயோகித்ததை எதிர்த்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்திருக்கின்றனர்.

நடைமுறை விதி 147-ம் பிரிவுப் படியுள்ள நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை என்பதால், அந்த மசோதாவைத் திரும்பப்பெற சர்க்காரை அனுமதிக்கக்கூடாது என்று, எதிர்க்கட்சியினர் கூறினர்கள்.

சபைத் தலைவர், 147-ம் பிரிவின் நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை என்பது உண்மைதான் என்றாலும் ஏற்பட்டுள்ள சூழ்நிலையின் காரணமாக, தனக்கு விதி முறை 401-வது பிரிவுப்படியுள்ள விசேட அதிகாரங்களின்படிதான் மசோதாவைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அனுமதிப்பதாகக் கூறினாராம்.

உடனே, எதிர்க்கட்சியினர் தோழர் எச். வி. காமத் உட்பட வெளியேறினர் என்று தெரியவருகிறது.

மதுவிலக்கு! மதுவிலக்கு!

கடந்த நான்கு மாதங்களில் சேலம் மாவட்டத்தில், ரூ. 78,753 பெறுமான சாராயம், போலீசாரால் கைப்பற்றப்பட்டது என்று சேலம் மாவட்ட மதுவிலக்கு குழு அறிக்கை கூறுகிறது.

மைசூர் அமைச்சர் மீது குற்றச்சாட்டு

மைசூர் மாநில சுகாதார அமைச்சர் டி. சென்னையாவைப் பற்றிய குற்றச்சாட்டுகள், அகில இந்திய காங்கிரஸ் குழு பிரசிடெண்டு நிஜலிங்கப்பா (பின்னர்)யிடம் அறிவிக்கப்பட்டு மனுக்களும் கொடுக்கப்பட்டனவாம். மாவட்ட காங்கிரஸ் குழு அலுவலகத்தில் செல்லப்பனைச்சார்ந்த பல காங்கிரஸ்காரர்கள் குழுமியிருந்தனராம்.

அமைச்சர் சென்னையா சமூகத்திற்கு விரோதமான செயல்களுடன் சேர்ந்துகொண்டு இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்குச் சரி செய்ய வருவதாகவும் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டனவாம்.

இச்சம்பவத்தை காங்கிரஸ் தலைமைப் பீடத்திற்குத் தெரிவித்து ஆவன செய்வதாக செல்லப்பன் உறுதி தந்தாராம்.

பெருமை மிக்கது திராவிடர் பண்பாடு

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 19—4—'56 வியாழன்

பொறுக்கி எடுத்தக் 'கங்காணிகள்'!

★

"வட இந்தியக் கங்காணி என என்னை என் அவர்கள் அழைக்கின்றனர் என்பது எனக்கு விளங்கவில்லை; ஆனால், அக்கங்காணித் தொழிலை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், தலைமுறைத் தலை முறையாக அவர்கள் செய்து வரவில்லையா?"

தம்மை வடநாட்டுக் கங்காணி என நாம் கூறுவதாக தாமே எடுத்துக் காட்டும் பொழுது, தாம் கங்காணிப் பணி புரியவில்லை எனத் திட்ட வட்டமாக மறுத்துக் கூறி இருக்க வேண்டும் கனம் காமராசர். அவரே எடுத்துக் காட்டி அழும் நமது குற்றச்சாட்டு வெறும் அபவாதம் என்பதை மெய்ப்பிப்பதற்கான, காரண காரியங்களை விளக்கமாக எடுத்துக் காட்டுவதுதான் முறையும், ஒரு முதலமைச்சருக்குரிய அழகுமாகும்.

ஆனால் கனம் காமராசரோ, தம்மைக் கங்காணி எனக்கூறும் பொழுது மட்டும் பொருள் விளங்கிக் கொள்ளாதவர்போல் நடித்து, அதே கங்காணி என்ற சொல்லை நம்மீது சாட்டி பூரிக்கிறார்.

ஒரே சொல்லை தம்மீது பிறர் சுமத்தும்பொழுதுமட்டும், அச் சொல்லுக்குரிய பொருள் தெரியாதவர்போல் பாவித்துக் கொள்ளுவதும், அதே சொல்லை தாம் பிறர் மீது சுமத்தும் பொழுதுமட்டும், அதற்குரிய பொருளை உணர்ந்து பேச முற்படுவதும், விசித்திரமான தாகும். கனம் காமராசர் போன்ற ஒரு மேதைக்கே, அது, சாத்தியமாகக்கூடும்.

அவராலேயே ஒப்புக்கொள்ளப்பட்டு, அழுகுரலாக்கக் கிளம்பியுள்ள, அவர் புரிந்து வரும் வடநாட்டுக் கங்காணிப் பணியைப்பற்றி பிறகு விளக்குவோம். அதற்கு முன்னால், அவரால், நாம் புரிந்ததாக நம்மீது சுமத்தப்படும், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்துக் கங்காணிப் பணியின் வரலாற்றை ஒரு சிறிது ஆய்வோம்.

தான் நீர் அருந்திய இடத்திலிருந்து ஓடிவரும் நீரைப் பருகிக்கொண்டிருந்த ஆட்டுக் குட்டியை, விழுங்கி ஏப்பம் விட முடிவுகட்டிவிட்ட ஒரு ஓநாய், 'தண்ணீரை என் கலக்குகிறாய்' எனக் கோபித்துக் கேட்டதாம். 'நீ நீர் அருந்துவதற்குக் கீழ்ப்பகுதியில்தானே நான் நீர் அருந்துகிறேன், என்னால் எப்படி நீ அருந்தும் நீரைக் கலக்கிவிட முடியும்?' என ஆட்டுக்குட்டி நியாயம் கேட்டதாம்.

அந்த நியாயத்தைக்கேட்டு ஓநாய் திருப்தி கொள்ளவில்லை. 'ஆறு திங்களுக்கு முன்னால் நீ அந்தத் தவறை என் செய்தாய்?' எனக் கேட்டதாம் ஓநாய்!

'அந்தோ! நான் பிறந்து இன்னும் மூன்று திங்கள்கூட பூர்த்தியாகவில்லையே! ஆறு திங்களுக்கு முன்னால் உனக்கு எப்படி நான் இன்னல் செய்திருக்க முடியும்?' என ஆட்டுக்குட்டி எதிர்வாதம் பேசிற்றும்!

'நீ, எனக்குக் கேடு செய்யவில்லையானால் என்ன? உன் தாய் செய்திருப்பாள்?' என்று சொல்லி முடித்ததும் முடிக்காததுமாய், அப்பாவி ஆட்டுக் குட்டி மீது பாய்ந்து, அதன் குரல்வளையைக் கடித்துக் குருதியைக் குடித்து மகிழ்ந்ததாம் ஓநாய்!

கதையில் கண்ட ஓநாய் கையாண்ட அதே வழியைத்தான், முதலமைச்சர் கனம் காமராசர் நம்மிடத்திலும் கையாள முனைந்திருக்கிறார். ஆள்மிரட்டும் சேவகத்தில் அவர் இருப்பதால், தம்மை ஓநாயாக பாவித்துக் கொள்ளுவதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், நம்மை ஆட்டுக்குட்டி நிலையில் வைத்து மதிப்பிட வேண்டாம் என்று மட்டும் நாம், அவரை எச்சரிக்கின்றோம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெற்ற பிரிட்டிஷ் ஆட்சியை, மக்கள் நலனுக்குப் பயன்படுத்தி வெற்றி பெற்ற நீதிக் கட்சியின் அரசியல் சேவையைத்தான், தலைமுறை தலைமுறையாகச் செய்துவந்தக் கங்காணிப் பணி என முதலமைச்சர் குறிப்பிடுகிறார். அதன் உண்மை என்ன என்று பார்ப்போம்.

நீதிக்கட்சியின் நேரடியான பின் சந்ததியினராக நாம் இருக்கலாம். அதற்காக, மூன்றையர் செய்தது தவரென்றே ஒப்புக் கொள்வதானாலும், அவர்கள் செய்த தவறுக்காக, அவர் வழிவந்த நம்மைத் தூற்றுவது நியாயமாகுமா? பொருந்தத் தான் பொருந்துமா?

முதலமைச்சர் தூற்றுதலைப் பொருத்தக்கூடியதே என ஒப்புக்கொள்வதானால், முதலமைச்சரும், அந்தத் தூற்றுதலுக்கு உள்ளாகாமல் தப்பமுடியாது, எவ்வாறு எனில், முதலமைச்சர்தான் நாட்டு விடுதலைப் படையில் ஒருவராக இருந்தாரே அல்லாது, அவர்களுடைய மூதாதையர் மகன் வழி நடந்துகொண்டவர்கள் அல்லர். அதற்கு மாறாக, பிரிட்டிஷ் ஆட்சியை ஒப்புக்கொண்டு, அதன் சட்டதிட்டங்களுக்கு அடங்கி, வரி செலுத்தித்தான் முதலமைச்சரின் மூதாதையர் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இதுவும் ஒருவகைக் கங்காணிப் பணியேயாகும். கங்காணிப் பணியில் வேண்டுமானால் தரங் குறைந்த ஒன்றாக, அது, இருக்கக்கூடும் என்பதை நாம் ஒப்புகிறோம்.

இருக்கும் இடந்தேடி ஆங்கில ஏகாதிபத்தியத்தை உருத்தி அழைத்துவந்து, நாட்டை அதனிடம் அடிமையாக்கும் இழி செயலை நீதிக்கட்சி செய்யவில்லை. வெளியேற முயன்றுக் கொண்டிருந்த வெள்ளை துரைமார்கள் காலில் விழுந்து, இங்கேயே என்றென்றும் இருந்து விடுங்கள் என்ற துரோகத்தையும், நீதிக்கட்சி எப்பொழுதும் மனத்தாலும் நினைத்ததில்லை.

மேற்கூறிய இரண்டுந்தான் பொறுக்கி எடுத்த துரோகச் செயல்களாகும். அச்செயல்கள், கங்காணிப் பணிகள் அனைத்திலும் முதல்தரமான கங்காணிப் பணிகளாகும்.

இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு விரோதிகள் யார் என்று கேட்டால், அதற்கு விடை சொல்லவேண்டியவர்கள் நீதிக் கட்சியினரேயாவர். இன்று இங்குள்ள மக்கள் பெற்றுள்ள ஆளும் பயிற்சியும், நீதிக்கட்சி தந்த வாய்ப்பிச்சையேயாகும்.

நீதிக் கட்சியினர், அக்காலத்தில் ஆளும் பொறுப்பில் பங்கு கொண்டிருக்கவில்லையானால், ஒருக்காலும், ஏகாதிபத்தியம் கப்பலேறி விட்டிருக்காது. அப்படி எவராது கருதும் பட்சத்தில், அது அவருடைய அரசியல் அறிவின்மையையே காட்டக் கூடியதாகும்.

இரண்டாவது உலகப்பெரும் போரின் காரணமாக, இந்தியத் துணைக்கண்டத்து ஏழு மாகாணங்களில் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருந்த காங்கிரஸ் கட்சியினர், அதிகாரத்திலிருந்து விரட்டப்பட்டனர். ஆட்சியிலிருந்து காங்கிரஸ் கட்சியினர் விரட்டப்பட்டதும், ஏகாதிபத்தியம் நடுநடுங்கிப் போய் வெளியேறிவிடத் துணிந்துவிடவில்லை. பத்து மந்திரிகள் புரிந்துவந்த பணியை, நான்கு வெள்ளை சிவிலியன் அதிகாரிகளிடம் ஒப்படைத்து, நாட்டில் அதிகார வர்க்க ஆட்சியை நடத்திற்று ஏகாதிபத்தியம். எனவே, குறைந்த பட்ச ஜனநாயகக் கோட்பாடுகளுக்குட்பட்டு ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்து, நாட்டு மக்களுக்குக் கூடுமானவரை நலம் பல செய்தும், ஏகாதிபத்திய எதேச்சாதிகார ஆட்சிக்கு இடம் கொடுத்துவிடாதும்பணியாற்றி வெற்றி கண்டிருப்பது நீதிக் கட்சியாகும். அதற்காக அந்தக் கட்சியை இப்பொழுது தூற்றித் திரிவதும், அதன் வழி வந்தவர் என்ற ஒரு குற்றத்திற்காகவே, நம்மைக் 'கங்காணிப்பணிபுரிந்தோர்' எனகனம் காமராசர் வசைபாடக் கிளம்புவதும், அரசியல் துறையில் வெறும் பிதற்றலேயாகும். இதைத் தொடர்ந்தே நாளையும் எழுதுவோம்.

'நீதிமன்றம் தலையிடும் காலம் வரவில்லை'

வங்க-பீகார் இணைப்பைத் தடுக்கக் கோரிய மனு தள்ளுபடி

கல்கத்தா உயர்நீதிமன்றத் தீர்ப்பு

கல்கத்தா, ஏப். 18—

வங்காளம் பீகார் இணைப்புப் பற்றிய நீர்மானத்தை வங்க சட்ட சபையில் பிரேரேபிக்க கூடாதென சபைத் தலைவர், முதன் மந்திரி ஆகியோருக்கும், இது பற்றி சட்ட மியற்றக்கூடாதென டில்லி சர்க்காருக்கும் தடைவிதிக்க வேண்டுமெனக்கோரி வங்க இடதுசாரிகளில் நால்வர் தாக்கல் செய்திருந்த 'ரிட்' மனு ஒன்றை கல்கத்தா உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்திருக்கிறது.

"ஒரு மசோதா நிறைவேற்றப் படாமலிருக்கும்வரை நீதிமன்றத்திற்கு அதுபற்றிக் கவலை இல்லை.

"இணைப்பு பற்றிய ஒரு பிரேரேபணைக்குச் சட்டசபையில் 'நோட் டூஸ்' பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிரேரேபணை நிறைவேறுமா இல்லையா என்பது கூடத் தெரியாது; அப்படியே நிறைவேறினாலும், இணைப்பு ஏற்பட்டுவிடவில்லை. எனவே நீதிமன்றம் தலையிடுவதற்கான காலம் இன்னும் வரவில்லை,"

என்று, நீதிபதி சின்ஹா தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

உரிய காலத்தில் மட்டுமே அரசியல் சட்டத்தின் அம்சங்களைக் கண்டிப்பாக அனுசரிக்க வேண்டுமே தவிர இஷ்டப்படி அதை விரிவாக்கிக் கொள்ளக் கூடாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

போபால் சம்பவங்கள்!

உள்நோக்கம் கொண்டவை என முதன் மந்திரி குற்றச்சாட்டு

போபால் நகரில் அண்மையில் நடைபெற்ற கலவரங்கள், நாட்டிற்கு விரோதமான சக்திகளால், திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டவை என்றும், உலகத்தின் முன் இந்தியாவின் நிலையைத் தாழ்த்தவே இம்மாதிரி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், போபால் முதன் மந்திரி டாக்டர் சங்கர் தயாள் சர்மா மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த பச்மர்ஹி எனும் இடத்தில் குறிப்பிட்டாராம்.

இந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள், இந்தியாவில் சிறுபான்மை முஸ்லிம்கள் கொடுமைப்படுத்தப்படுவதாகக் காண்பித்து காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவின் நிலையை பலக்குறைவானதாக்குவதையே நோக்கமாகக்கொண்டிருந்தனர் என்றும் அவர் குற்றம் சாட்டினராம்.

அகதிகளின் குறைபோக்க அல்ல-அவர்களுக்கு பெருவாழ்வு தர!

டெல்லி காட்டும் அக்கறை

கல்கத்தா, ஏப். 13—

அகதிகளாக பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த வடநாட்டவருக்குப் புதுவாழ்வளிக்க டெல்லி சர்க்கார் காட்டிவரும் அக்கறை அளவிடற்கரியதாகும். அவர்களுக்குச் சிறு குறைவும் ஏற்பட்டு விடாமல் கவனிப்பதிலே மட்டுமல்ல, டெல்லி சர்க்கார் அக்கறை காட்டுவது, மாறாக, தம் இன மக்களின் நீண்ட எதிர்காலத்தை மனதில் கொண்டு நிரந்தரமான பெருவாழ்வை அவர்களுக்குப் பெற்றுத் தருவதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற சாம்பரான் மாவட்டத்தில் (பீகார்) இந்த அகதிகளுக்கு வாழ்வளிப்பதற்காகத் தரவுசெய்யப்படும் நிலம்தான் உலகத்திலேயே, அகதிகள் புனர்வாழ்வு பெறுவதற்காகத் தீட்டப்பட்டதிலேயே மிகப்பெரிய திட்டமாம்.

சுமார் 1,25,000 அகதி விவசாயக் குடும்பங்களுக்கு—அதாவது 5 இலட்சம் அகதிகளுக்கு நிரந்தர வாழ்வு தருவதற்கான திட்டமாம் அது. இது இரண்டாம் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுவதாம்.

சுமார் 11 மாநிலங்கள் இந்த அகதிகளின் புனர்வாழ்வுத் திட்டத்தில் பங்கு பெறுமாம்.

அந்தந்த மாநிலங்களில் குடியேறி வசதிமிக்க வாழ்வு பெறப் புறப்படும் அகதிகளுடன், அவர்கள் செல்லும் மாநில மொழியும், அகதிகள், அறிந்த வங்க மொழியும் தற்ற அதிகாரி ஒருவர் கூடவே அனுப்பப்படுவாராம், அகதிகளுக்கு மொழிக் கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்காக.

இந்த 5 இலட்சம் அகதிகளுக்குமாக 11 மாநிலங்கள் வழங்கியுள்ள 30 இலட்சம் ஏகர் நிலம், இப்போது விவசாயத்திற் குறியதாகப் பண்படுத்தப்பட்டு வருகிறதாம்.

இந்தியாவில் சிமெண்ட்டுத் தொழிற்சாலைகளின் உற்பத்தி சக்தி, ஆண்டிற்கு 49,30 000 டன்களாக இருந்து வருவதை 1960-61ம் ஆண்டுக்குள்ளாக 1,21,30,000 டன்களை உயர்த்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மன்னிப்புக் கோரினர் மந்திரி!

தலைவர் பேச அழைத்தபோது சபையில் இல்லையாம்

மத்திய சர்க்கார் மந்திரி ஒருவர் மக்கள் சபையில் மன்னிப்புக் கோரியிருக்கிறார்.

தனது முன்னைய பதில் ஒன்றைத் திருத்தி, அறிக்கை ஒன்று வெளியிட வேண்டும் என்பது, இயற்கை வள இலாகா மந்திரியான மாளவியா சபைத் தலைவரிடம் கோரியிருந்தார். அதுவும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருந்தது.

சபைத் தலைவர் மந்திரி மாளவியாவைப் பேச அழைத்தபோது மந்திரி, சபையில் இல்லை.

சிறிது நேரம் தாமதமாக சபைக்கு வந்த அவர், அவசர அவசரமாகத் தனது அறிக்கையைத் தாக்கல் செய்ய முற்பட்டார். உடன் தலைவர் குறுக்கிட்டு சபையிடம் தாமதமாக வந்தமைக்காகவும், தலைவர் அழைத்தபோது சபையில் இல்லாதிருந்ததிற்காகவும் மந்திரி மன்னிப்புக் கோர வேண்டும். பின்னரே அறிக்கையைத் தாக்கல் செய்ய அவர் அனுமதிக்கப்படுவார், என்று தெரிவித்தார். உடனே மந்திரி மாளவியாவும் மன்னிப்புக் கோரியிருக்கிறார்.

தலைவர் பின்னர் பேசும்போது, உறுப்பினர்களும், மந்திரிகளும் இம்முறையை ஒரு சபை விதியாகவே கருதி நடந்துகொள்ள வேண்டும்' என்று தெரிவித்திருக்கிறார்.

பெருமிதம் தருவது அவர்தம் வரலாறு!

உ. பி.-யைத் துண்டாட வேண்டும் என்ற கருத்து பரவலாக உள்ளது

காங்கிரஸ் மக்களிடத்தில் செல்வாக்கு இழந்துவிட்டது

வடவர் தலைவர்கள் கவலை

புதுடெல்லி, ஏப். 18—

இருமொழி மாநிலங்கள் அமைப்பது என்ற கொள்கையை, பொதுத் தேர்தல் நடந்த பிறகு திணிக்க முயற்சித்துப் பார்க்கலாம் என்று, டெல்லி சர்க்காரும், வடநாட்டு காங்கிரஸ் தலைவர்களும் கருதுகின்றனராம்.

சமீப காலமாக நடந்த உபத் தேர்தல்களில் (மாநில சட்டசபைகளுக்கும் டெல்லி மக்கள் சபைக்கும்) காங்கிரஸ் தோல்விகளைக் கண்டு வருவது நேரு உள்ளிட்ட வடவர் தலைவர்களுக்குக் கவலையைத் தருகிறதாம்.

மக்கள் சபைக்காக, உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்ற இரு இடங்களுக்கான உபத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வியுற்றதாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது கேட்ட வடவர் தலைவர்கள்—குறிப்பாக நேரு, மிகவும் வருந்துகின்றனராம்.

காங்கிரசார், உ. பி.-யில் மட்டுமின்றி இதர இடங்களிலும் மக்களுடன் தொடர்பு கொள்வதை விடுத்துவிட்டனர். மக்களிடம் செல்வாக்கு இழந்துவிட்டனர். இந்த நிலையை மாற்றவேண்டும் என்று நேரு போன்றவர்கள் அடிக்கடி தம் சகாக்களுக்குக் கூறி வருகின்றனராம்.

மேலும், உத்திரப் பிரதேசத்தைத் துண்டாட வேண்டும் என்ற கருத்து நாடெங்கிலும் பரவலாக இருந்து வரும்போது, உ. பி. முதன் மந்திரி அதைப் பொருட்படுத்தாமல், விந்தியப் பிரதேசம் என்ற அண்டை மாநிலத்திலிருந்தும் பகுதிகளைச் சேர்த்து உ. பி. யைப் பெரிதாக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி அதற்காகப் பாடுபட்டு வருவது எத்தனை வருத்தற்குரியது என்று வேறு, வடவர் தலைவர்கள் அங்கலாய்த்துக் கொள்கிறார்களாம்.

உ. பி யைப் பிளக்காமலிருக்கட்டில்லி ஏகாதிபத்யவாதிகள் கையாண்ட வஞ்சகமான தந்திரம் தான் இந்த நல்லவராக பார்க்கும் நாடகம் என்பதை உலகறியுமே.

மாநிலப் புது அமைப்பு மசோதா உ. பி. சட்டசபைக்கு அனுப்பப் பட்டிருக்கத் தேவையே இல்லை. ஏனெனில், மாநிலப் புது அமைப்புக் குழுவின் சிபாரிசுகளினுலோ அல்லது டில்லி சர்க்காரின் முடிவுகளினுலோ உ. பி. சிறிதும் பாதிக்கப்படவில்லை.

புதுவையில் பி. சி. ஜி.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக அடுத்த இரண்டாண்டுகளில் புதுவை மாநிலம் முழுவதும் பி. சி ஜி. ஊசி போட மாநில சர்க்கார் திட்டமிட்டுள்ளனராம்.

கோலார் தங்க வயல்

தேசிய மயமாக்க மைதுருக்கு டெல்லி அனுமதி!

கோலார் தங்க வயலை மைசூர் சர்க்கார் எடுத்துநடத்த, டெல்லி சர்க்கார் உண்மையில் அனுமதி தந்துவிட்டதாகத் தெரியவருகிறது.

நஷ்டஈடு வழங்குவது பற்றியே இப்போது பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றனவாம்'

மொத்தமாக ரூ. 2 கோடிக்கு அதிகமாக நஷ்டஈடு தரப்படாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டிஷார் மட்டும் குடியேறலாமாம்

கெனியா சர்க்கார் அறிக்கை

நைரோபி (கெனியா), ஏப். 18—

கிழக்கு ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் காலனியான கெனியாவில் குடியேறுவதற்குப் பிரிட்டிஷார் மட்டுமே அனுமதிக்கப்படவேண்டும் என்றும் கெனியாவின் தேவையைப் பூர்த்திசெய்ய பிரிட்டனால் இயலாது போகுமாயின் வேண்டுமானல் மட்டுமே சர்க்கார் வேறு காட்டவரை எதிர்பார்க்கும் என்றும், கெனியா சர்க்கார் சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்கள்

கடந்த ஏழு ஆண்டுகளில் 6,452 ஆசியாக்காரர்கள் குடியேற நிரந்தர 'பிரவேச பர்மிட்'கள் வழங்கப்பட்டன என்றும், 6,580 ஐரோப்பியரும், 2,504 பிரிட்டிஷாரும் குடியே அனுமதிக்கப்பட்டனர் என்றும் தாக்கலாகியுள்ள அறிக்கை கூறுகிறது.

கெனியாவின் மக்கட்தொகை, ஆப்பிரிக்கர்கள் 52,50,000, ஐரோப்பியர் 1,44,000, ஆசியாக்காரர் 52,000 என்று அமைந்திருப்பதாயும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவிற்கு ஜப்பானிய உருக்கு!

5 இலட்சம் டன் வாங்கப்படுமாம்

டோக்கியோ, ஏப். 18—

அடுத்து வரப்போகும் மூன்று ஆண்டுகளில் இந்தியாவிற்கு ஜப்பான் 5 இலட்சம் டன் உருக்கு விற்பனை செய்யும் என்றும், அது குறித்து ஒப்பந்தம் செய்துகொள்ள ஜப்பானிய தூதுக்குழு ஒன்று அடுத்த மாதம் வரும் என்றும் இந்திய உருக்கு இலாகா தலைவர் சி ஆர். நடேசன் தெரிவித்திருக்கிறார்.

அம்பர் சர்க்கா!

அகமதாபாத், ஏப். 17—

குஜராத்திய கதர் ஊழியர்கள் கூட்டமொன்று நடைபெற்றபோது, நடப்பு ஆண்டில் 10,000 அம்பர் சர்க்காக்களை தயாரிக்க முடிவு செய்யப்பட்டதாம். இதற்கென 80 'பரிசிரமாலயங்களை' நிறுவவும் தீர்மானிக்கப்பட்டதாம். இத்திட்டத்திற்காக ரூ. 3,50,000 செலவழிக்கப்படுமாம்.

உணவுப் பொருள் வாங்க 80 லட்சம் டாலர்

இந்தியாவிற்கு அமெரிக்கா வழங்கும் உதவி

புதுடில்லி, ஏப். 17—

இந்தியாவுக்கு உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக 80 இலட்சம் டாலர் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க வினம்பர இலாகா செய்தியொன்று கூறுகிறது. எற்கனவே, அனுமதிக்கப்பட்டுள்ள தொகையோடு இதைச் சேர்த்தால் நடைமுதல் பொருளாதார ஆண்டில் இந்தியாவுக்கு கோதுமை வாங்குவதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் தொகை 1,94,00,000 டாலர் ஆகுமாம்.

நாணயங்களின் விலையை இந்திய நாணயத்தில் இந்தியா திருப்பித் தருமாம். இத்தொகை பின்னர் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்காக இந்தியாவுக்குக் கடனுகக் கொடுக்கப்படுமாம்.

சுதந்திர இலங்கையில் அன்னிய ராணுவ தளமா?

'காமன்வெல்த்' அமைப்பிற்கு வெளியிலிருதால் சாதகங்கள் உண்டு

புதிய பிரதமர் பண்டாரநாயகா கருத்து

"இலங்கையில் தளம் அமைத்துக்கொண்டு குடியேறியுள்ள பிரிட்டிஷ் இராணுவத்தினர், இலங்கையிலிருந்து வெளியேறியே தீரவேண்டும்.

"ஒரு நாடு—ஆதிபத்திய உரிமைகொண்ட ஒருநாடு என்ற வகையில் இலங்கையில், வெளிநாடு ஒன்றிற்குத் தளங்கள் இருப்பது பொருத்தமானது அல்ல.

ஆசியாவின் சுவிட்சர்லாந்து என்ற வகையில் இலங்கை உருவாக வேண்டும் என்ற எனது எண்ணத்திற்கும், அது முரணுனதாகும். மேலும், யுத்தம் மூளுமானுல், முதல் முதலாகத் தாக்கப்படவேண்டியவை என்ற குறிப்பான இடங்களுள் இலங்கையும் ஒன்றுகிவிடக்கூடும்.

"திருகோண மலையில் ஒரு கப்பல் படைத் தளமும், வேறு இரு இடங்களில், விமான தளங்களும் பிரிட்டனுக்கு இலங்கைத் தீவில் இருக்கின்றன.

இந்த தளங்கள் அமைத்துக் கொள்வதற்கென்றே இலங்கை சர்க்கார் பிரிட்டிஷாருடன் ஏதும் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதவில்லை. ஏதாவது இரகசிய ஒப்பந்தங்கள் இருக்கின்றனவா என்பதும் எனக்கு இதுவரை தெரியாத ஒன்றாகும். சுதந்திர இலங்கை குடியரசாக மலரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். 'காமன் வெல்த்' அமைப்பில் தொடர்ந்து இடம் பெறுவதா கூடாதா என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. 'காமன் வெல்த்' அமைப்பில் இருப்பதால் இலாபம் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதில் இல்லாமலிருப்பதாலும் நமக்குச் சாதகங்கள் நிரம்ப உண்டு என்பதையும் மறந்துவிடுவதற்கில்லை"

என்று தெளிவாக—ஆனுல், நிதானமாக, இலங்கையின் புதிய பிரதமர் பண்டாரநாயகா, பத்திரிகை நிருபர் ஒருவருக்குத் தந்த பேட்டியின் போது தெரிவித்திருக்கிறார்.

கிழக்கு ஜெர்மன் தூதுக் குழு

வர்த்தக ஒப்பந்தம் செய்ய இலங்கை வருகிறது

கிழக்கு ஜெர்மன் நாட்டிலிருந்து தூதுக் குழு ஒன்று, இலங்கையுடன் வர்த்தகம் நடத்துவது பற்றி ஆராய்ந்தறிவதற்காக, அனுப்பி வைக்கப்படும் என்று தெரியவருகிறது.

கிழக்கு ஜெர்மனில் உற்பத்தியாகும் பொருள்களைக் கொடுத்து விட்டு டீ, ரப்பர் போன்ற மூலப் பொருள்களை வாங்கிக்கொள்ள எண்ணுவதாகவும் கூறப்படுகிறது

சீனப் பிரதமர் வாழ்த்து

'சீன, சிங்கள மக்களிடையே மேலும் நட்புறவு வளர வேண்டும் என்று விரும்புகிறேன்' என்பதாக, சீனப் பிரதமர், சிங்களப் பிரதமரான பண்டாரநாயகாவிற்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

★

கம்யூனிஸ்டுகள் ஆதரவு

இலங்கையில் பண்டார நாயகா மந்திரிசபை அமைத்திருப்பதை வரவேற்றும், அவரது சர்க்கார் மேற்கொள்ளும், சுதந்திரத்தைப் பலப்படுத்தக்கூடியதும், ஜனநாயக வளர்ச்சிக்கானதும், மக்களின் முன்னேற்றத்திற்குமான, நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவு தருவதெனவும், இலங்கை கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழு, ஒரு அறிக்கையில் தெரிவித்திருக்கிறது

★

பாக்கி 6 பேர்களும் நியமனம்

இலங்கை மக்கள் சபையில் நியமனம் மூலம் நிரப்பப்படுகிற 6 இடங்களுக்கும் மெம்பர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர்.

இவர்களில் மூன்று பேர் வெள்ளையர்கள்; (முன்னைய மக்கள் சபையில் இரண்டு வெள்ளையர்களே நியமிக்கப்பட்டிருந்தனர்)

திருத்தணி ஊராண்மைக் கழகத் தேர்தல்

தமிழர்கள் பெருவாரியாக வெற்றி

திருத்தணி, ஏப். 17—

திருத்தணி ஊராண்மைக் கழகத் தேர்தலில் 1,2,8 தொகுதிகளுக்கு தோழர்கள் வையாபுரி, எம் கே. சுப்பிரமணியம், டி. சரவணய்யா (அனைவரும் தமிழர்கள்) ஆகியோர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

3-வது தொகுதிக்கு கே. துர்க்கையாவும் (தெலுங்கர்) 4-வது தொகுதிக்கு கே. வாசுதேவரும் (தெலுங்கர்), 5-வது தொகுதிக்கு வீராசாமியும் (தமிழர்), 7-வது தொகுதிக்கு ஜி. ஜெகதீசரும் (தமிழர்), 9-வது தொகுதிக்கு வி. கே. சடகோபாலாச்சாரியாரும் (தமிழர்), 10-வது தொகுதிக்கு லோகநாதரும் (தமிழர்) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 6-வது தொகுதிக்குத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. மீதமுள்ள 10-இடங்களில் தமிழருக்கு 8 இடங்களும் தெலுங்கருக்கு 2 இடங்களும் கிடைத்தன.

செய்திச் சுருக்கம்

★

சென்னை—வண்ணையம்பதி இளங்கோ கலை மன்றம்

15—4—56 அன்று காலை 12-15 மணியளவில் மேற்படி மன்ற செயற்குழுத் தேர்வு நடைபெற்றபோது, தலைவராக மு. செல்லப்பன்; செயலாளராக ப. மோகனவேல்; துணைச் செயலாளராக வே. கோ. மோகன்; பொருளாளராக தோ. கு. சேகர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சர்வஜன சீர்திருத்த மகாசங்க நூல் நிலையம்

13—4—56 காலை 10 மணியளவில், சென்னை—பெரியமெட்டில் உள்ள மேற்படி நூல் நிலையத்தில் சங்க அங்கத்தினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது ஸ்டாலின்-ஜிப்பி நடனமும், தாகின் பரதேசி நடனமும், நடராசன்-மகிமைதாஸ் பாடலோடு நடைபெற்றது. பின்னர், சங்கத்தின் சென்ற ஆண்டு நிர்வாகிகளான தோழர்கள் வி. சங்கரன், எம். துரைராஜ் இருவருக்கும் பாராட்டு வழங்கப்பட்டதுடன், இவ்வாண்டிற்கு நிர்வாகியாக தோழர் முருகேசன் என வழங்கும் சென்னன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இலக்கிய மன்றம் அமைப்புக் கூட்டம்

13-4-56 மாலை 4 மணிக்கு இலக்கிய மன்றம் அமைப்புக் கூட்டம், கொழும்பு செம்பட்டாத் தெரு, 14-ம் எண் கட்டிடத்தில், தோழர் மு. க. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம், தலைவர், தோழர் ஏ எஸ். மணவைத்தம்பி, செயலாளர்- பி. எஸ். ஏ. கனி, துணைச் செயலாளர்: தோழர் கெ. கருணுநிதி செயற்குழு உறுப்பினர்கள்: தோழர்கள் இரெ. பெரியண்ணன் "உரிமைக் குரல்" ஆசிரியர் வி. எஸ். முருகேசன், மு. க. இராசன், எம். முக்தார், சிவ. சொன்றிர பாண்டியன் ஆகியோர் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சினிமா ரசிகர் சங்கத் திறப்பு விழா

குடந்தையில் சினிமா ரசிகர்கள் சங்கத் திறப்புவிழா, 15-4-56-ல் கபிஸ்தலம் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு சி. சாமிநாதன் (செட்டியார்) தலைமையில் நடைபெற்றது. குடந்தை கலைக் கழக (சங்கீத நடன நாடக அகாடமி) செயலாளரும், வர்த்த குமாஸ்தாகள் சங்க கௌரவச் செயலாளருமான திரு பி. டி. சண்முகம் அவர்களும் மற்றும் பலரும் சங்கத்தின் அவசியத்தைக் குறித்துப் பேசினர்கள்.

ரசிகர்களுக்கு வேண்டிய சகாதார மற்ற இதர சௌகரியங்களை தாராளமாகச் செய்புமாறு நியேட்டர் நிர்வாகிகளைக் கேட்டுக்கொண்டும், இந்திய செய்திப் படங்களை நியேட்டரில் நிரையிடவேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு நிர்வாகிகளை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த ஆண்டு நிர்வாகிகளாக திரு சி. சாமிநாதன் (செட்டியார்) தலைவராகவும், திரு. கே. எஸ். எம். கே. முணுகுமர (செட்டியார்) துணைத் தலைவராகவும், திரு. என். சக்ரபாணி, திரு. பி. டி. சண்முகம் செயலாளருமாகவும், கே. என். மருதப்ப (செட்டியார்) பொருளாளராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இரண்டு பார்சல்; ஒரு மலையாளி முஸ்லீம் ஆகியோராவர்.

இந்த ஆறு பேரில் இருவர்கள் தான் புதியர்கள்; எஞ்சிய நால்வரும் முன்னைய சபையில் இடம் பெற்றிருந்தோரே.

அருமை மறந்தோம்; உரிமை இழந்தோம்!

சுருதி பேதமான வசை பாடுகிறார் சுப்பிரமணியம்!

அவரது துடுக்குத்தனம்: தோழர் சம்பத் கண்டனம்

தோழர் சம்பத் அவர்கள் சென்னை பெத்துநாயக்கன்பேட்டையில் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்றுத் தரப்பட்டது. தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது :—

"'தமிழ் நாடு' என்று பெயரிடவேண்டும் என்று சபையில் தீர்மானம் வந்தபோது, எதிர்க்கட்சியினர், 'தமிழ் இரத்தம் ஓடுபவர்களானால் காங்கிரசார் இந்த தீர்மானத்தை ஆதரித்திருக்கவேண்டும்என்றுபேசினர் உடன் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் எழுந்து, 'எங்கள் உடம்பிலும் தமிழ் இரத்தம்தான் ஓடுகிறது. நாங்களும் தமிழர்கள் தான். ஆனல், மேலிடம், எங்களுக்குப் பேசாமலிருக்குமாறு உத்தரவிட்டுவிட்டதே. என் செய்வோம்' என்று பேசியிருக்கிறார்.

"காங்கிரஸ் ஜனநாயகத்தின் நவின ஆயுதமாக வாய்ப்பூட்டிடுதல் விளங்குகிறது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு அந்த உறுப்பினரின் பேச்சு.

"மந்திரி சுப்பிரமணியம் இதுகுறித்துப் பேசும்போது, 'தமிழ் நாடு' எனப் பெயரிட வேண்டுமென்பது, மக்களின் பிரியம்தான். ஆனல் நியாயம் வேருக இருக்கிறது' என்று இழுத்திருக்கிறார். மந்திரி சுப்பிரமணியத்தின் வாதப்படி, நியாயம் என்பது மக்களின் பிரியத்திற்கு—விருப்பத்திற்கு விரோதமானது போலும்! காங்கிரசார் ஜனநாயகத்திற்குத் தரும் மதிப்பு எந்த அளவு என்பதை இதிலிருந்து கணக்கிடலாம்.

"இப்படி மக்களின் விருப்பத்திற்கு மாருக நடந்து கொள்ளும் இதே மந்திரி, ஆச்சாரியார் ஆட்டிவைக்கும பொம்மையாக இருந்து கொண்டு, பொம்மலாட்டத்தில், ஆட்டிவைப்பவனின் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளுக்கொப்ப ஆடுகிற பொம்மையாக இருந்துகொண்டு வசைமாறி பொழிந்து கொண்டிருக்கிறார். இந்த வசைமாறிகளுக்கெல்லாம் காரணம் எனன?

"பொம்மலாட்டம் பார்த்திருக்கிறோம் நாமெல்லாம். அந்த ஆட்டத்தில், பொம்மை ஒன்று ஆடும்; உட்கார்ந்து பார்ப்பவர்களைப் பார்த்துக் கேலி செய்யும்; நடனமாடும்; உட்கார்ந்திருப்பவர்களை மகிழ்விக்க நினைத்தால் சிரிக்கும்; வருத்த நினைத்தால் அழும்; அவமதிக்க நினைத்தால் காலைத் தூக்கிக் காட்டும். ஆனல், அந்த பொம்மையே இத்தனையையும் செய்வதில்லை. மாறுக, திரை மறைவில் உட்கார்ந்திருக்கும் ஒருவன், கண்ணுக்குத் தெரியாத கருப்புக் கயிறுகள் மூலம் அந்த பொம்மையை ஆட்டிப் படைப்பான். அந்த பொம்மையின் ஆட்டங்கள் அனைத்தும் அவனுடைய ஆசை அபிலாஷைகளை, எண்ணங்களைப் பொறுத்ததாகும். அது போல மந்திரி சுப்பிரமணியத்தை திரை மறைவிலிருந்து ஆச்சாரியார் ஆட்டிப் படைக்கிறார்—சுப்ரமணியம் ஆடுகிறார்—வசைபாடுகிறார், நம்மீது. தமிழர்களுடைய கோரிக்கைகளைக் குறித்துக் கேலி பேசுகிறார்.

"இந்த மந்திரி சுப்பிரமணியத்தின் சுருதி பேதமான வசைகளுக்கெல்லாம் பதில் கூறவேண்டிய துர்ப்பாக்கியமான நிலை நமக்கு ஏற்படுவது வருந்தற்குரியதாகும்.

"நீதிக் கட்சித் தலைவர் பி. டி. இராசன் அவர்களைக் குறித்து கனம் சுப்பிரமணியம் சட்டசபையில் தாறுமாருகப் பேசியிருக்கிறார்.

"'வேறெரு நாடாக இருந்தால், இவர்களை உயிரோடு விட்டுவைத்திருக்க மாட்டார்கள்' என்று பேசினராம், இராசனைப் பார்த்து.

"அண்ணு அவர்கள் இது குறித்து அழகான ஒரு உதாரணம் கூறினர்கள்.

"'கோபுரத்தின் உச்சியில் உள்ள குரங்கு, கோயிலுக்குள் செல்லும் அழகியைப் பார்த்து, கோணல் காட்டுமாம். கோபுரத்தின் மேலிருக்கிறோம் என்ற துணிவில், அழகிகூட அது குறித்துக் கவலைப்படாதிருந்துவிடக் கூடும். ஆனல் அருகிலிருக்கும் சிறுவர்கள் இந்த அழகியைப்போய் இந்தக் குரங்கு 'அழகு' காட்டுகிறதே! என்ன போக்கிரித்தனம் என்று நினைத்து, சிறு கல்லை எடுத்து குரங்கின் மேலே வீசவும்கூடும்! என்று.

"அதுபோல சுப்பிரமணியம் சாதுவான இராசன்மீது வசை பொழிந்தால் அவர்கூட பேசாமலிருந்துவிடலாம் அழகியைப்போல. ஆனல், சிறுவர்கள் வாளாவிருப்பார்கள் என்று, கோபுரத்துக் குரங்கு எண்ண வேண்டாம்.

"இராசன்மீது இழிசொல் எப்போது வீசப்படுகிறதோ அவர் கூட்டணித் தலைவரானபின் அவர் கூட்டணித் தலைவராவதற்குமுன் இராசன் அவர்களுடன் நான்காண்டு கட்சு மேலாக, அதே சட்ட சபையில் சுப்பிரமணியம் வீற்றிருந்திருக்கிறார். அப்போதெல்லாம் அவரை எதிர்த்துப் பேசாத சுப்பிரமணியம், இப்போது, அவர் கூட்டணிக்குத் தலைவராகி, கூட்டணியும் வெற்றிகரமான ஒரு மாபெரும் அர்த்தாலை நடத்திய பிறகு, அவரை எதிர்த்துப் பேசுவதின் நோக்கம் என்ன?

"திரு. இராசன் செய்த தவறுதான் என்ன? வெள்ளையர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தபோது யுத்தப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார் என்பது தவறுதானே?

"திரு. இராசன் அப்போது தனக்குப் பிடித்தமான ஒரு கொள்கை வழி நின்று பணியாற்றினர். அன்றிருந்த சர்க்காரின் நடவடிக்கைகளில் சில அவரது உள்ளத்திற்குச் சரியெனப்பட்டிருக்கலாம் அதனை அவர் ஆதரித்திருக்கலாம். இன்றிருக்கிற சர்க்காரின் கொள்கைகளில் சில அவருக்குப் பிடிக்காமலுமிருக்கலாம். அதனல் அவற்றை எதிர்க்கவும், பிடித்தமானவற்றை ஆதரிக்கவும் செய்யலாம்.

"அரசியலில், அமைகிற சர்க்காரை யெல்லாம் அண்டியே பிழைப்பது என்பது இழிவானதுதான். ஆனல், திரு. இராசன் அவர்கள் அந்த இழிகுணம் கொண்டவராக இல்லை என்பதை அவர் இப்போதைய சர்க்காருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதே சொல்லும்.

"அந்த இழிகுணம் கொண்டவர்கள் கனம் சுப்பிரமணியத்தின் வரிசையிலேயே அமர்ந்திருக்கிறார்கள் மந்திரிகளாக. ராமநாதபுரம் ராஜா, மாணிக்க வேலு நாயக்கர், பரமேசுவரன் போன்றோர்.

"தனக்குச் சரியெனப் பட்டதை மேற்கொள்ளும், பண்பு கொண்ட இராசன போன்ருரை ஏறிட்டுப்பார்க்கவும் தகுதி யற்ற கனம் சுப்பிரமணியம போன்ருர் சட்டசபையில் கொஞ்சம் அடக்கமாகப் பேசக் கற்றுக்கொள்ள வேண்டுமென, நேர்மையான காங்கிரஸ்காரர்கள் அவருக்கு கூறவேண்டும்"

சிங்களம் மட்டுமே அரசாங்க மொழி!

பண்டாரநாயகாவின் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 18—

சிங்களத்தையே ராஜாங்கமொழியாக்கக் கோரும் மசோதா ஒன்று ஏப். 20-ந் தேதி கூடப்போகும் இலங்கையின் புதுப் பார்லிமென்டில் புதிய சர்க்காரால் கொண்டு வரப்படும். இதுவே சர்க்காரின் முதல் நடவடிக்கையாகும். சாதாரண மெஜாரிடியில் மசோதா நிறைவேறியதும் மசோதா சட்டமாகும். இதை அரசியல் சட்டத்தில் பொருத்தும் விஷயம் பிற்பாடு கவனிக்கப்படும்.

சிங்களத்தை ராஜாங்க மொழியாக்க மட்டும் இம்மசோதா கொண்டுவரப்பட்டாலும், தமிழ் மக்களுக்குத் தமிழ் மொழியை உபயோகிக்கவும் பாதுகாக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கொள்கையிலிருந்து தம் கட்சி பிறழவில்லையென்று பிரதம மந்திரி பண்டாரநாயகா கூறினர்.

தமிழ் மொழியின் நியாயமான அளவு உபயோகத்திற்கு ஏற்பாடு செய்வது தம் கட்சியின் கொள்கையில் உள்ளடங்கியதுதான் என்றார் 'ஸ்வபாஷை'க்கு மாறுவதற்கு கொஞ்சம் அவகாசம் பிடிக்குமென்றும் இடைக்காலத்தில் தமிழை நியாயமான அளவை உபயோகிப்பது பற்றி பரிசீலிக்கப்படுமென்றும், இதுபற்றிய நிர்வாக, சட்டபூர்வ ஏற்பாடுகள் எடுக்கப்படுமென்றும் பண்டாரநாயகா மேலும் குறிப்பிட்டார்.

தி. மு. கழக 6-வது ஆண்டு விழா

21—4—56 மாலை 6 மணிக்கு, பொன்மலை, மேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழக 6-வது ஆண்டு விழா, திரு. வி. க. திடலில் நடைபெறும். அண்ணு, அம்பில்-தருமலிங்கம் ஆகியோர் பேசுவர்.

இரவு 10 மணிக்கு கலை நிகழ்ச்சியும் உண்டு.

'தீச்சுடர்' வளர்ச்சி நிதிக்காக

21—4—56 சனி இரவு 10 மணிக்கு, கரூர் ராஜராம் தியேட்டரில் தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் தலைமையிலும், தோழர் சி. பி. சிற்றரசு முன்னிலையிலும், தோழியர்கள் கே. கமலா, கே. லீலா, மற்றும், நன்னியூர் பகுத்தறிவு நாடக மன்றத்தினரால், 'அரக்கு மாளிகை' எனும் சரித்திர நாடகம் நடைபெறும்.

திருச்சி மாநாடு :

பந்தல் வேலைகள் ஆரம்பம்

மே 17, 18, 19, 20 தேதிகளில் திருச்சி பந்தயத் திடலில் நடைபெறவிருக்கின்ற மாநில மாநாட்டுப் பந்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

மாநாட்டு வரவேற்புக் குழு பொறுப்பிலேயே மாநாடு பந்தல் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பந்தல் அமைக்கும் பொறுப்பை திருச்சி தோழர் சாம்பு அவர்கள் ஏற்றுக்கொண்டு, அவரது மேற்பார்வையில் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு :

21—4—56 மாலை 8 மணிக்கு, எ. 1, குப்பய்யர் தெருவிலுள்ள கழகப் பணிமனையில், செயற் குழு கூடும்.

அயன்புரம் 21-வது வட்டத் தி. மு. கழகத் தோழர்கட்கு :

20—4—56 மாலை 6 மணிக்கு (எண் 64, மேட்டுத் தெரு) செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அது போது, பலமுக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

பொதுச்செயலாளர்

சுற்றுப்பயணம்

ஏப். 20 : தஞ்சை மாவட்டம்
21 : திருச்சி - திருமழப்பாடி
22 : பெங்களூர்

ராமன் வடநாட்டான்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அரக்கர்கள் தெடுத்துவந்தனர்.

"அதுபோல இன்றும் சில அரக்கர்கள் உள்ளனர். 'கடவுளே வணங்காதீர்கள். ராமகிருஷ்ண பூஜை செய்யாதீர்கள்' என்று மக்களிடம் பிரச்சாரம் செய்கிறார்கள். இவர்களின் பிரச்சாரத்தால் எவரும் கலங்கவேண்டாம்."

என்று ஆச்சாரியார் டில்லி 'பக்தஜன சபா' ஆதரவில் நடைபெறும் 'ராம நவமி' விழாவில் பேசுகையில் குறிப்பிட்டாராம்.

தி. மு. கழக 6-வது ஆண்டு விழா

பெங்களூர்-இலக்குமணபுரி தி. மு. கழக வளர்ச்சிக்காக

சிறப்புக் கூட்டம்

22—4—56 மாலை 5 மணிக்கு
சர். புட்டண்ணு செட்டி டவுன் ஆலில்

தலைவர் :
எஸ். வி. பதி
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
(வள்ளுவர் வகுத்த வாழும்நெறி)
எம். ஜி. இராமச்சந்திரன்
(கலையும்-வாழ்வும்)

நன்கொடை: ரூ. 1. அணு 8.

கழகக் கூட்டம்

நீடாமங்கலம்:
(சீனிவாசபின்னை சத்திரம் எதிரில்)
21—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
கி. கிருட்டிணமூர்த்தி
பேசுபவர் :
க. அன்பழகன்

சொற்பயிற்சிக் கூட்டம்

21—4—56 மாலை 6½ மணிக்கு, வடசென்னை தாளமுத்து—நடராசன் முன்னேற்ற மன்றப் பணிமனையில், தோழர் இ. தியாகராசன் தலைமையில் தோழர்கள் ப. கண்ணன், புலியரசு ஆகியோர் 'இலக்கிய உணர்வு' எனும் பொருள் பற்றிப் பேசுவர்.

* * *

20—4—56 மாலை 6½ மணிக்கு, முத்தமிழ் மன்றப் பணிமனையில் (17, சாலிவிஞயகர்கோயில் தெரு, சென்னை-1.) தோழர் மா. லோ. இளவழகன் தலைமையில், 'இலட்சியம்' எனும் பொருள் பற்றிப் பலர் பேசுவர்.

* * *

20—4—56 மாலை 6 மணிக்கு, சென்னை 8-வது வட்ட திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகத்தில், தோழர் எ. வி. ஆசைத்தம்பி தலைமையில் 'திருமணம்' எனும் பொருள் பற்றிப் பலர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில் 21—4—56 பிறபகல் 2-30 மணிக்கு மேல் சென்னை முத்துக் கிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். பேராசிரியர் மயிலை-சிவ. முத்து அவர்கள், 'கண்ணோட்டம்' ஒற்றுடல் ஆகிய இரு அதிகாரங்களையும் விளக்கிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

பொதுக்கூட்டம்

20—4—56 மாலை 6 மணிக்கு சென்னை — பெரியமேட்டு ஈ. கே. குருத் தெருவிலுள்ள மாங்காளியம்மன் கோயில் எதிரில்,

தலைவர்:
க. ஆரியசங்காரன்
பேசுவோர்:
கண்ணதாசன்
மு. பா. பாலகிருட்டிணன்

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஏப். 20 : ஆலக்குடி (புதுக்கோட்டை)
21 : நீடாமங்கலம்
22 : தஞ்சை (தமிழாசிரியர் மாநாடு)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

இழந்தன திரும்பப் பெற திருச்சிக்கு வாரீர்